பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 கார்த்திகை 08 சனிக்கிழமை (23-11-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 280

# அரசுக்குத் தொல்லை கொடுத்தால் நாடாளுமன்றம் கலைக்கப்படும்!

## பொ. ஐ. மு.வில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு ஜனாதிபதி எச்சரிக்கை

கொழும்பு, நவம்பர் 23

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் சிலவற்றின் தலைவர்களும் உறுப்பினர்களும் அரசுக்கு தொடர்ந்து தொல்லை கொடுத்து வந்தால் நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தவேண்டிவரும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா எச்சரித்துள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த சில தலைவர்கள் தமது கட்சியின் தேவை குறித்து மட்டும் சிந்தித்துச் செயற்படுவதால் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கும் அரசின் நேர்மையான, — திட்டமிட்ட — நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என 'லங்காதீப' ஞாயிறு இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் எட்டுக் கட்சிகள் அங்கம் வகிக்கின்றன.

இந்த எட்டுக் கட்சிகளில் போக்குவரத்து அமைச்சர் ஸ்ரீமணி அத்துலத் முதலியின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி நிறைவேற்று அதிகார முள்ள ஜனாதிபதி பதவி மற்றும் இனப்பிரச்சினைத் தீர்வு யோசனை ஆகியவற்றில் அரசுடன் முரண்பட்டு நிற்கிறது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் - புலிகள் வவுனியாவில் சமர்!

கொழும்பு, நவ. 23

வவுனியாவில் பாதுகாப்புப் படைகளுக்கும், புலிகளுக்கும் இடையே கடும் சண்டை நடைபெற்றுள்ளது.

கடந்த புதன்கிழமை புலிகள் வவுனியாவில் உள்ள முன்னணிப் பாதுகாப்பு நிலைகளைத் தாக்குவதற்கு முற்பட்டபோது இராணுவத்தினர் பீரங்கித் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நெலுவங்குளத்திலும் மற்றொரு பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்திருந்த இராணுவ நிலைகள் மீதும் புலிகள் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

புலிகளை ஏற்றிச் சென்ற பல வாகனங்கள் பாதுகாப்புப் படையினரின் தாக்குதலால் சேதப்படுத்தப்பட்டன என்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### இடைக்கால நிர்வாகம் — அமைச்சர் பதவி:

## டக்ளஸின் கோரிக்கையை ஏற்க சட்டச் சிக்கல் முக்கிய தடையாம்!

கொழும்பு, நவ. 23

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தும் வடக்கு—கிழக்கு இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தவும்--

அவர் கேட்கும் வடக்கு — கிழக்கு நிர்வாகத்துக்குப் பொறுப்பான அமைச்சை அவருக்கு வழங்கவும் —

முடியாமல் இருப்பதற்கு சட்டச் சிக்கலே காரணம் என அரச தரப்பில் சாக்குப் போக்கு கூறப்படுகின்றதாம்.

கொழும்புச் செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

அரசு வழங்கும் அமைச்சுப் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு டக்ளஸ் தேவானந்தாவை அரசுத் தரப்பு வற்புறுத்தி வருவதாக செய்திகள் ஏற்கனவே வெளியாகியிருந்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### 'பகிடிவதை' என்ற பெயரில்

## பேராதனைதமிழ்மாணவன் கடுமையாகத் தாக்கப்பட்டார்

கொழும்பு, நவ. 23

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் கற்கை நெறியை மேற்கொள்ளும் திருகோணமலையைச் சேர்ந்த தமிழ் மாணவன் ஒருவர் பகிடிவதை (ராக்கிங்) என்ற போர்வையில் கடுமையாகத் தாக்கப்பட்டு கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 15 திகதி சக மாணவர்கள் மேற்படி மாணவனை அக்பர் விடுதிக்கு அழைத்துச் சென்று அவரை கை, கால்களாலும் தடிகளாலும் தாக்கியதாகவும்—

பின்னர் கட்டிலில் தூக்கிப் போட்டு எட்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜானக பெரேரா வெளிநாட்டுக்கு

யாழ்ப்பாணம், நவ. 23

பிரிட்டனின் றோயல் பாதுகாப்புக் கல்லூரியில் இராணுவப் பயிற்சி நெறி ஒன்றைப் பின்பற்றுவதற்காக மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா விரைவில் பிரிட்டனுக்குப் புறப்பட்டுச் செல்கின்றார்.

அங்கு இரண்டு வருட பயிற்சி நெறி ஒன்றை அவர் பின்பற்றுவார் எனத் தெரிய வந்தது.

யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தின் 51 ஆவது டிவிஷனின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்று முன்தினம் மோதல்

எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்று முன்தினம் இரவு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்ததாகக் கருதப்படும் — இனம் தெரியாத — நான்கு இளைஞர்களின் சடலங்கள் இராணுவத்தினரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

சுமார் 25 முதல் 28 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞர்களின் சடலங்கள் அடையாளம் காணப்படுவதற்காக யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

இதற்கிடையில் —

எழுதுமட்டுவாழ் பகுதியில் — காவல் அரணை அண்டிய பிரதேசத்தில் — படையினர் மீது தாக்குதல் நடத்திய விடுதலைப் புலிகள் மீது இராணுவத்தினர் பதில் தாக்குதல் நடத்தினர் என்றும்—

இந்த மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் நால்வர் உயிரிழந்தனர் என்றும் —

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சிஸ்ஸ ஜெயதுங்க நேற்று கொழும்பில் தெரிவித்தார். (உ-4-15)

## கந்தளாய்ப் பகுதியில் ராணுவ ஜீப் மீது தாக்குதல்

### படை அதிகாரி ஒருவர் பலி!

கொழும்பு, நவ. 23

கந்தளாயில் விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் இரவு இராணுவ ஜீப் ஒன்றின் மீது மறைந்திருந்து தாக்குதல் நடத்திய போது ஒரு பாதுகாப்பு அதிகாரி கொல்லப்பட்டதுடன் இரு படையினர் காயமடைந்தனர்.

கண்ணிவெடித் தாக்குதலுக்கு இலக்கான இந்த இராணுவ வாகனத்தை புலிகள் சுற்றி வளைத்து தன்னியக்க துப்பாக்கிகள் மூலம் சுட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## நாடாளுமன்றம் மீது தாக்குதல் அச்சுறுத்தல்

### பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

கொழும்பு, நவ 23

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதி மீது தாக்குதல் நடத்தப்படவுள்ளது என நாடாளுமன்றத்திலுள்ள பொலீஸ் நிலையத்திற்குக் கிடைத்த அநாமதேய தொலைபேசித் தகவலை அடுத்து நேற்று முன்தினம் நாடாளுமன்றச் சுற்றாடலில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது.

நாடாளுமன்றத்தை அண்டிய பகுதிகளில் நேற்று முன்தினம் தேடுதல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது என லங்காதீப நாளிதழ் தெரிவிக்கிறது. (இ-10)

## கல்வி அமைச்சரின் யாழ். விஜயம் ரத்து

### பாதுகாப்பு பிரச்சினை காரணமாம்

கொழும்பு, நவ. 23.

பாடசாலைகளுக்கான சீருடைகளை விநியோகிக்கும் விழாவில் கலந்து கொள்ள கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான யாழ்ப்பாணம் செல்ல இருந்தார் என்றும் —

எனினும் பாதுகாப்புக் காரணங்களுக்காக அவரது விஜயம் ரத்துச் செய்யப்பட்டு விட்டது என்றும் — பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்கொலைப் போராளி ஒருவரைப் பயன்படுத்தி அமைச்சரைக் கொலை செய்வதற்கு மேற்கொண்ட திட்டம் ஒன்றை வடக்கின் பாதுகாப்புப் பிரிவுகள் கண்டுபிடித்ததையடுத்தே அமைச்சரின் யாழ். விஜயம் ரத்தானது என்றும் —

அதனைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினரால் வலிகாமத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது தற்கொலைப் போராளிகளின் குண்டுகள் பொருத்தப்பட்ட மூன்று உடைத்தொகுதிகள் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

இருபாலை கிழக்கு
அருள்மிகு
கேணிக்குளம்பதி

## லிங்க விநாயகர் தேவஸ்தானம்

(பழம்பிள்ளையார்)

## மணவாளக்கோல உற்சவம்

இன்று (23 - 11 - 1996) சனிக்கிழமை காலை 7-00 மணிக்கு 1008 சங்காபிஷேகமும், தொடர்ந்து விஷேட பூசை, திருவூஞ்சல், திரு உலா என்பன எம்பெருமானுக்கு நடைபெற உள்ளதால் அடியார்கள் வருகை தந்து எம்பெருமானின் இஷ்டசித்திகளைப் பெற்று உய்யும்வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

ச. வைத்தியநாதன் ஐயாவும்
(பரிபாலகரும், அர்ச்சகரும்)
தர்மகர்த்தாக்களும்

(43774)

## வலிகாமம் மேற்குப் பிரதேச சபை,

சுழிபுரம்.

சந்தைகள் / இறைச்சிக்கடைகளுக்கான

## கேள்வி அறிவித்தல் - 1997

1996 - 11 - 21 ஆம் திகதி வெளியான மேற்படி விளம்பரத்தின் அட்டவணையில் சங்கானை உப - அலுவலக மீன் சந்தையின் கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக்கூடியது) ரூபா. 2,000/- எனத் திருத்தப் படுகின்றது.

கா. சந்திரராசா
வலிகாமம் மேற்குப் பிரதேச சபை,
சுழிபுரம்.

வலி – மேற்குப் பிரதேச சபைத்
தலைமை அலுவலகம்,
சுழிபுரம், 1996 - 11 - 21. (சி- 3548)

## 6 ஆவது ஆண்டு நினைவு மீட்டல்

தோற்றம்: 06 — 10 — 1924



மறைவு: 23 — 11 — 1990

### அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்

(முன்னாள் சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும், சமூக அபிவிருத்திமன்ற ஸ்தாபகரும், இணைப்பதிகாரியும்)

சமூக அபிவிருத்திக்காக அயராது உழைத்து நம்மை வழிநடத்திய அன்னாரை நினைவு கூருகின்றோம்.

— சமூக அபிவிருத்தி மன்றம்.

குறிப்பு:

திங்கட்கிழமை (25 - 11 - 1996) காலை 8.30 மணிக்கு பணிப்பாளர் கூட்டமும், 11.00 மணிக்கு மாதாந்தப் பொதுக் கூட்டமும் நடைபெறும். பணிப்பாளர், கழக அங்கத்தவர்கள் சமுகமளிக்கவும்.

நிர்வாகச் செயலாளர்,
சமூக அபிவிருத்தி மன்றம்,
257/2, 1 ஆவது மாடி,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(4773)

## 8 இலங்கையர் உட்பட 17 பேர் கைது

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு உதவிய குற்றத்துக்காக 8 இலங்கையர்கள் உட்பட 17 பேர் கடந்த இரு வாரங்களில் தமிழ் நாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு மருந்து வகைகள், யூரியா, சிமெந்து, பெற்றோல், பற்றறிகள் போன்றவற்றை அனுப்புவதற்கு இவர்கள் உதவியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

## மட்டுவிலில் 7 அடி நீள மலைப்பாம்பு

மட்டுவில் பகுதியில் சுமார் 7 அடி நீளமான மலைப் பாம்பு ஒன்று அடித்துக் கொல்லப்பட்டது.

மட்டுவில் வடக்கு பனையடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள வீடு ஒன்றின் பின்புறமாகவே இந்தப் பாம்பு காணப்பட்டது.

அடித்துக் கொல்லப்பட்ட இந்தப் பாம்பு நேற்று முன்தினம் மக்கள் பார்வைக்காக மட்டுவில் பொதுச் சந்தையில் வைக்கப்பட்டிருந்தது.

## சுழிபுரத்தில் கால்நடை களவு

சுழிபுரம், நவ. 23

சுழிபுரம் பகுதியில் இரவு நேரங்களில் கால்நடைகள் களவாடப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

(இ-28)

## விவசாயிகளுக்கு "அமோனியா"

அச்சுவேலி, நவ. 23

புத்தூர் கமநல சேவை நிலைய பிராந்தியத்தில் விவசாயிகளுக்கு ''அமோனியா'' உரப்பசளை அந்தர் 640ரூபா வீதம் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படுகின்றது.

(இ-11)

## மிருசுவில் பிரசவ ஆஸ்பத்திரி பிறப்புப் பதிவு

தென்மராட்சி நவ. 23

சூரியப் பிரகாசம் இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்த வேளையில் மிருசுவில் அரச பிரசவ விடுதியில் பிறந்த குழந்தைகளின் பிறப்பு பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் காணாமற்போய் விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் குழந்தைகளின் பிறப்புகளை பதிவு செய்ய முடியவில்லை எனவும்—

இக் காலப்பகுதியில் மிருசுவில் பிரசவ விடுதியில் பிறந்த குழந்தைகளின் பெற்றோர் தமது பிள்ளைகளின் பிறப்புப் பதிவை மேற்கொள்ள பிரசவ விடுதிக்கு வருகை தருமாறும் வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் க. தம்பித்துரை அறிவித்துள்ளார்

(இ-117)

## வாடிக்கையாளர்களுக்கு

## - அல்டி -

எமது ஸ்தாபனம் தற்போது
இல. 75, பெரியகடை, யாழ்ப்பாணத்தில்
இயங்குவதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

— அல்டி

(43775)

யா/மெதடிஸ்த
## பெண்கள் உயர்தர பாடசாலை,

பருத்தித்துறை.

## ஆண்டு 6 அனுமதி - 1997

ஆண்டு ஆறு மாணவர் அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உரியபடிவத்தினை காரியாலயத்தில் பெற்று 10 - 12 - 96க்கு முன் விண்ணப்பிக்கவும். மாணவர் அனுமதிக்கான தெரிவுப்பரீட்சைக்கான திகதி பின்னர் பாடசாலை விளம்பரப் பலகையில் அறிவிக்கப்படும்.

(43764) அதிபர்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி

### இராசையா கந்தவனம்

(முன்னாள் ஆசிரியர், உடுப்பிட்டி அ.மி. கல்லூரி)

எம் கல்லூரியில் தொடர்ந்து பல ஆண்டுகள் ஆசிரியப்பணியாற்றி, ஓய்வு பெற்ற பின்பும் பழைய மாணவர் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்கி சில காலம் பணியாற்றிய அமரர் இ. கந்தவனம் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரினது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உடுப்பிட்டி
அமெரிக்க மிசன் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்.

(8993)

## மரண அறிவித்தல்கள்

திருமதி

### பொன்னம்மா கணபதிப்பிள்ளை

தோப்பு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பொன்னம்மா கணபதிப்பிள்ளை 22 - 11 - 96 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் (கிளாக்கர்) அன்பு மனைவியும், அருளானந்தம் (லண்டன்), சிவானந்தம் (ஏழாலை – வடக்கு கிராம அலுவலர்), விவேகானந்தம் (லண்டன்), நித்தியதேவி (லண்டன்), சத்தியதேவி (ஜேர்மனி), சாரதாதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், லீலாவதி, தவமேஸ்வரி, வசந்தராணி, சந்திரமூர்த்தி, சிறிதரன், தில்லைநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சோபிதா, சுமித்தா, கவித்தா, தினேஷன், துஷிந்தா, சேந்தன், ஆரணி, சுமங்கலி, வித்தகி, மூகாம்பிகை, சிறிரங்கன், லோஜிதா, ஜனகன், திலாணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (23 - 11 - 96) மு.ப. 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தோப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
க. சிவானந்தம்

ஆஸ்பத்திரி வீதி,
தோப்பு,
அச்சுவேலி

(43772)

### சின்னையா ஐயாத்துரை

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா ஐயாத்துரை 22 - 11 - 96 இல் காலமாகிவிட்டார்

இவர் காலஞ்சென்ற பூமலரின் அன்புக்கணவரும், விக்கினேஸ்வரன் [பிரான்ஸ்], விஜயராசா [ராசா களஞ்சியம்], பரமேஸ்வரன் [வியாபாரம்], நாகேஸ்வரன் [பிரான்ஸ்] விஜயகுமாரி வசந்தகலா, வசந்தமலர் ஆகியோரின் அன்புத்தந்தையும், ரவிச்சந்திரன், சிவமூர்த்தி பிறேமலதா ஆகியோரின் மாமனாரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை [24-11-96] நடைபெற்று மு.ப 10 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
விஜயராசா
(ராசா)

கே கே எஸ். வீதி,
தாவடி.

(8994)

## ஆத்ம சாந்தி அஞ்சலி



திருமதி

### தங்கமணி இராமுப்பிள்ளை

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் உதவி ஆசிரியையாகவும் உப அதிபராகவும் வியத்தகு பணியாற்றி ஓய்வு பெற்ற ஊரெழுவூர் திருமதி தங்கமணி இராமுப்பிள்ளை ஆசிரியையின் ஆத்ம சாந்திக் கிரியைகள் இன்று முற்பகல் அச்சுவேலியில் நடைபெறுகின்றன.

திருமதி தங்கமணி இராமுப்பிள்ளை ஆசிரியையின் ஆத்மா சாந்தியுறும் வண்ணம் எல்லாம் வல்ல கற்பக விநாயகரின் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்

அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள் பழையமாணவர்கள்,
அபிவிருத்திச் சங்கத்தினர்.

சைவத் தமிழ் வித்தியாலயம்
உரும்பிராய்
23–11–1996. (43777)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பெனாஸிர் பதவி கவிழ்ப்பு விவகாரம்:

# குஜ்ராலின் கருத்துக்கு பாக். கவலை தெரிவிப்பு

இஸ்லாமாபாத், நவ. 23

இந்திய வெளிவிவகார அமைச்சர் குஜ்ரால் அண்மையில் தெரிவித்த கருத்து தமக்கு கவலை தருவதாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் பெனாஸிர் பூட்டோ பதவி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் ஏற்பட்டுள்ள அரசியல். பொருளாதாரச் சிதைவுகள் இந்தியாவில் ஏற்படுத்தப்போகும் தாக்கங்களை இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது என குஜ்ரால் தெரிவித்திருந்தார்.

குஜ்ராலின் இக் கூற்று பாகிஸ்தானுக்கு மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளதாக பாகிஸ்தானின் வெளியுறவு அமைச்சகம் நேற்றுத் தெரிவித்தது.

பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரங்கள் பற்றி குஜ்ரால் கூறியுள்ள கருத்துக்கள் இரு நாடுகளுக்குமிடையே சுமுகமான உறவுகளை ஏற்படுத்த உதவாது என பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

(இ-10)

## ஜனாதிபதி கிளின்ரனின் ஆசிய விஜயம் ஆரம்பம்

கன்பரா, நவ. 23

ஆசிய சுற்றுப் பயணத்தின் தொடக்கமாக அமெரிக்க அதிபர் கிளின்ரன் தற்போது ஆஸ்திரேலியாவில் உள்ளார்.

இந்தச் சுற்றுப் பயணத்தின் அடுத்த கட்டமாக ஆசிய பசுபிக் பொருளாதார மாநாடு நடக்கும் பிலிப்பீன்ஸ் தலைநகரான மனிலாவுக்கும் அவர் செல்வார்.

அதன் பின்பு கிளின்ரன் தாய்வான் செல்வார்.

ஆஸ்திரேலிய விஜயத்தின் போது கான்பராவிலுள்ள நாடாளுமன்றத்தில் கிளின்ரன் உரையாற்றுவார்.

(இ-10)

## அழகுராணிப் போட்டி இறுதித் தேர்வு இன்று

### 12 ஆயிரம் படையினர் கடமையில்

பெங்களூர், நவ. 23

உலக அழகுராணிப் போட்டியின் இறுதித் தேர்வு நிகழ்வுகள் இன்று பெங்களூரில் நடைபெறுகின்றன. இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்குலக பழக்கவழக்கங்களைப் போலவே மேற்குலக நாகரிகத்தையும் இந்தியாவுக்குள் கொண்டு வருவதை எதிர்த்து, இந்துசமய தீவிரவாதக் குழுக்கள் தொடர்ந்தும் எதிர்ப்பைக் காட்டி வருகின்றன.

இன்று நடைபெறும் இறுதித் தேர்வைக் கண்டுகளிக்க வருவோருக்குப் பாதுகாப்பளிக்கவும் —

இடம்பெறும் என எதிர்பார்க்கப்படும் வன்முறைகளைத் தடுக்கவும் — 12 ஆயிரம் பாதுகாப்புப் படையினர் ஈடுபடுத்தப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது —

(இ-10)

## ஹொங்கொங் 16 மாடி கட்டடத்தில் தீ!

ஹொங்கொங்கில் 16மாடிக் கட்டடம் ஒன்று திடீரென தீப்பிடித்துக் கொண்டது மேல் மாடிகளில் இருந்த சுமார் 50 பேர் ஜன்னல்கள் வழியாகவும் கட்டடத்தின் விழும்புகளைப் பிடித்தும் உயிர் தப்பிக் கொண்டனர். கட்டடத்தில் அகப்பட்டவர்களின் எண்ணிக்கை தெரிவிக்கப்படவில்லை.

## ஸயரில் 40 ஆயிரம் அகதிக் குழந்தைகள்

ஸயர், நவ. 23

ஸயர் நாட்டில் பெற்றோர்களை இழந்த அல்லது பெற்றோரால் கைவிடப்பட்ட சுமார் 40 ஆயிரம் குழந்தைகள் அனாதைகளாகத் திரிவதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தெரிவித்துள்ளது.

இவர்களில் சுமார் 2,800 குழந்தைகள் பற்றிய விவரங்களே சேகரிக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு நடைபெற்ற எந்தச் சண்டையிலும் இவ்வளவு பெரும் எண்ணிக்கையான குழந்தைகள் அனாதைகள் ஆக்கப் படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-10)

## பாப்பரசரை சந்தித்தார் கியூபா அதிபர் காஸ்ட்ரோ

ஹவானா நவ. 23

கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ பரிசுத்த பாப்பரசர் 2 ஆவது அருளப்பர் சின்னப்பரை கடந்த செவ்வாய்க் கிழமை வத்திக்கான் நகரில் சந்தித்தார்.

தாம் இளமை பருவத்தில் யேசு சபைக்குரு மாரிடம் கல்வி கற்ற போது பாப்பரசரைச் சந்திக்கும் வாய்ப்பு தமக்கு ஏற்படுமென நினைத்துக் கூடப் பார்க்கவில்லை என அவர் தெரிவித்தார்.

அதேசயம் பாப்பரசர்—காஸ்ட்ரோ சந்திப்புக்கு அமெரிக்கா வாழ்த்து தெரிவித்துள்ளது.

அவரது நாட்டில் மனித உரிமைகள் மேன்மைபட இந்த சந்திப்பு வழிவகுக்கும் என அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

1959 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதி காஸ்ட்ரோ பதவியிலிருந்த போதிலும் பாப்பரசரைச் சந்தித்தது இதுவே முதல் தடவை ஆகும்.

அடுத்த வருடம் கியூபாவுக்கு விஜயம் செய்யுமாறு காஸ்ட்ரோவிடுத்தஅழைப்பை பாப்பரசர் ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-ரி)

## உலக அரங்கில்

## படகுகள் கடலில் மூழ்கி 180 பேர் பலி

இம்மாதத் தொடக்கத்தில் ஹெய்ட்டியிலிருந்து அமெரிக்காவுக்கு சட்ட விரோதமாக படகுகளில் பயணம் செய்த சுமார் 180 பேர் கடலில் மூழ்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

அவர்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# ஒருபாடசாலைக்கு பல பழைய மாணவர்சங்கங்கள்: அனைத்தையும் கல்வி அமைச்சு கட்டுப்படுத்துமா?

ஒரு பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் எனும் போது அது தனி ஒரு சங்கமாக இருக்கும் என்பது கட்டாயமல்ல.

யாழ்ப்பாணத்தில் இருக்கும் ஒரு பாடசாலைக்கு யாழ்ப்பாணத்தில் பிரதானமான ஒரு பழைய மாணவர் சங்கம் இருக்கும் அதேசமயம் —

கொழும்பில், கண்டியில், திருகோணமலையில் என பல வெளியூர்களிலும் ஆங்காங்கே இருக்கும் பழைய மாணவர்கள் ஒன்று கூடி தத்தமது இடங்களில் தனித்தனிச் சங்கங்களை சுயாதீனமாக அமைத்துச் செயற்படுவதும் வழமையே.

இது போல லண்டன், பிரான்ஸ், சுவிஸ், ஜேர்மன் ஆஸ்திரேலியா என பல நாடுகளிலும் தனித்தனியாக சுயாதீனமாக இயங்கும் பிற பழைய மாணவர் சங்கங்களும் இருப்பதுண்டு.

இது தவிர, பேராதனை, யாழ்ப்பாணம் என பல பல்கலைக்கழகங்களிலும் அங்குள்ள ஒரு குறிப்பிட்ட பாடசாலையின் மாணவர்கள் ஒன்று சேர்ந்து தத்தமது பாடசாலை பழைய மாணவர் சங்கங்களை ஆங்காங்கே அமைத்திருப்பதையும் நாம் காணலாம்.

இது மட்டுமல்லாமல், றோயல் கல்லூரி போன்றவற்றில் ஒரு குறிப்பிட்ட வகுப்பில் ஒரே ஆண்டில் படித்த அல்லது ஒரு குறிப்பிட்ட ஆண்டில் பாடசாலையை விட்டு விலகிய ஒரே கால மாணவர்கள் ஒன்று சேர்ந்து ஒரே அணியாக பழைய மாணவர் குழுக்களை அமைத்துச் செயற்படுவதும் நமக்குத் தெரியும்.

இவ்வாறு ஒரே பாடசாலைக்குசுயாதீனமாகஇயங்கும் பலபழையமாணவர்சங்கங்கள் — பல இடங்களில் — இயங்குகின்றன. அவை எல்லாம் ஒரு தாய்ச் சங்கத்தின் கீழ் கட்டுக்கோப்பான அமைப்பாக இருக்கின்றனவா என்றால் இல்லை என்றே கூறலாம்.

அவை தத்தமது இடத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப சுயாதீனமாக இயங்கிக் கொண்டிருப்பவை என்றாலும் —

தத்தமது சூழலில் உள்ள தமது பாடசாலையின் பழைய மாணவர்களை ஒன்றிணைக்கும் அமைப்பாக இருக்கும் அதே சமயம் தமது கல்லூரி அன்னைக்கு தொண்டாற்றுவதிலும் அவை முன்நிற்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

> பாடசாலைகளின் பழைய மாணவர்கள் சங்கங்கள் தொடர்பாக குடாநாட்டின் கல்வி வட்டாரங்களில் எழுந்திருக்கும் சர்ச்சையைத் தெளிவுபடுத்தும் கட்டுரைத் தொடரில் முதலாம் பகுதி நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது. இன்று இரண்டாவது பகுதி வெளியாகிறது.இதன் முடிவில் இப்பிரச்சினைதொடர்பாக வாசகர்கள் மற்றும் கல்விமான்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் அவ்வப் போது பிரசுரமாகும். (ஆ-ர்)

### உண்மையான பழைய மாணவர் சங்கம் எது?

கல்வி அமைச்சின் சுற்றறிக்கையில் —

## பகுதி - 2

"பொறுப்புக் கூறுதலையும் ஒத்துழைப்பையும் மேலும் உறுதிப்படுத்துவதற்காக அப்பாடசாலை அதிபரே பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக இருக்க வேணடும்" — என்று கூறப்பட்டுள்ளது.

இதன்படி கூறப்படும் பழைய மாணவர் சங்கம் எது? பாடசாலைச் சுற்றாடலில் இயங்கும் பழைய மாணவர் சங்கம் மட்டும் தானா? அல்லது பிற இடங்களில், பிற ஊர்களில், பிற நாடுகளில் இயங்கும் சங்கங்களையும் அது குறிக்கின்றதா?

இது குறித்து சுற்றறிக்கையில் தெளிவாக ஏதும் கூறப்படாவிட்டாலும்—

பாடசாலை அதிபர் ஒருவர் பிற ஊர்களில் அல்லது பிற நாடுகளில் இருக்கும் சங்கங்களுக்கு தலைமை வகிப்பது செயற்பாட்டில் இயலாத காரியம் என்பதால் அவற்றை விட்டு விடுவோம்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை யாழ்ப்பாணப் பாடசாலைச் சூழலில் இயங்கும் சங்கத்தை மட்டும் அது குறிப்பதாக வைத்துக் கொள்ளலாம்.

### நோக்கம் என்ன?

பாடசாலையை விட்டு [illegible] நிர்வாகத்துக்கு அப்பாற்பட்டவர்களாகச் சென்றிருக்கும் பழைய மாணவர்கள் தங்களுக்குள் கூடி அமைக்கும் தங்களின் சங்கத்துக்கு இன்னாரைத் தான் தலைவராக வைத்திருக்க வேண்டும் என கட்டளையிடும் அல்லது பணிக்கும் அதிகாரம் கல்வி அமைச்சுக்கு உண்டா என்ற கேள்வி ஒருபுறம் இருக்க—

அத்தகைய பணிப்புரை கல்வி அமைச்சின் கட்டுப்பாட்டில் இல்லாத — சுதந்திரமான— பழைய மாணவர்களைக் கட்டுப்படுத்துமா என்பதும் ஒருபுறமிருக்க—

இந்த உத்தரவின் மூலம் கல்வி அமைச்சோ, திணைக்களமோ சாதிக்க முற்படுவது என்னவென்பதை நோக்குவது சுவையானதாகும்.

நிதி முகாமைத்துவம் உட்பட பொறுப்புக் கூறுதலையும் ஒத்துழைப்பையும் மேலும் உறுதிப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கை என்கின்றது கல்வி அமைச்சின் சுற்றறிக்கை.

### சேது

யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகளில் அவற்றின் சுற்றாடலில் இயங்கும் பழைய மாணவர் சங்கங்களை விட, வெளியூர்களில், வெளிநாடுகளில் உள்ள அவற்றின் சங்கங்கள் பெருமளவு நிதியைத் திரட்டுவது நமக்குத் தெரிந்த விடயம்.

உதாரணமாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கொழும்பு பழைய மாணவர் சங்கம் பல லட்சம் ரூபா நிதியைத் திரட்டி தனியாக 'நம்பிக்கை நிதியம்' (Trust Fund) ஒன்றையே அமைத்துள்ளது.

இது போன்ற சங்கங்களும் தமது பாடசாலையின் சுற்றாடலில் இருக்கும் பழைய மாணவர் சங்கத்தைப் போல—

தமது பாடசாலைக்காக — பாடசாலையை முன்னேற்றும் நோக்கத்துடன் — பாடசாலையின் பெயரைக் கூறியே — நிதியைத் திரட்டுகின்றன.

பாடசாலையின் பெயரைக் கூறி திரட்டப்படும் நிதிக்கு பொறுப்புக் கூறுதலை உறுதிப்படுத்துவதற்காக மேற்படி சுற்றறிக்கையை கல்வித் திணைக்களம் விடுக்குமானால்—

பாடசாலைச் சுற்றாடலுக்கு அப்பால் வெளியூரில்— வெளிநாட்டில் — இயங்கும் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் நிதிக்கு பொறுப்புக் கூறுதலை உறுதிப்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது?

வெளியூர்களில், வெளியிடங்களில் உள்ள பழைய மாணவர் சங்கங்களின் நிதி விவரத்தைக் கண்காணித்துக் கையாள முடியாத கல்வி அமைச்சு, பாடசாலைச் சுற்றாடலில் இயங்கும் பழைய மாணவர் சங்கங்களில் மட்டும் வீணாகத் தலையிட்டு, பாடசாலையின் ஒட்டுமொத்த சமூகத்தின் அதிருப்தியைச் சம்பாதித்து, சாதித்துக் கொள்ளப் போவது என்ன?

பாடசாலைச் சுற்றாடலில் உள்ள பழைய மாணவர் சங்கத்தின் நிதிப் பொறுப்பை பாடசாலை அதிபர் மூலம் உறுதிப்படுத்த இச்சுற்றறிக்கை மூலம் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்தாலும் —

நிதிப் பொறுப்பை உறுதிப்படுத்தும் விடயத்திலும் சில வேடிக்கையான விடயங்கள் உள்ளன.

அவற்றை இக்கட்டுரைத் தொடரின் அடுத்த இதழில் பார்ப்போம்.

(இன்னும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் சிறிய வீடும் வளவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: நாகராஜா இந்துமதி, தியேட்டர் ஒழுங்கை, இணுவில். (8992)

டீசல் என்ஜின் 10 H. P. 8 H. P., பெற்றர் என்ஜின்களுக்குரிய உதிரிப்பாகங்களும் 15 U. F, 440 V கப்பாசிற்றர், கிறைன்டர் பிளேட் ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஸ்ரீராஜ் வட்டு கிழக்கு, சித்தன்கேணி. (43767)

இறைச்சிக் கோழி (புறோயிலர்) சுத்தம் செய்து விற்கப்படும். V. K. M. FARM குமாரசாமி ஸ்ரோர்ஸ், இல. 12, கனகசபை லேன், சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். (43768)

1 1/2 Kg. மிற்கு மேற்பட்ட நிறையுடைய இறைச்சிக் கோழி புறோயிலர் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. முகவரிகள்: R. S. K. கோழிப் பண்ணை, முருகபதி, உடுவில், சுன்னாகம், (உடுவில் மான்ஸ் பாடசாலை வீதி). R. S. K. கோழிப் பண்ணை, தபாற் கந்தோர் வீதி, மானிப்பாய் (விகானை வளவு மானிப்பாய்). [43614]

## மணமகன் தேவை

யாழ். இந்து 35 வயது பூரம் 1ஆம் பாதம் சிங்கலக்கினம் உடைய A/L படித்த மணமகளுக்கு, பட்டதாரி, அரச உத்தியோகத்தர் அல்லது தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் மணமகன் தேவை. மற்றவை நேரில். மே/பா இல. 560, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (43760)

## மாடுகளுக்கு நோய்த் தடுப்பு மருந்து

யாழ்ப்பாணம், நவ. 23

மாடுகளுக்கு ஏற்படக்கூடிய தொண்டை அடைப்பான் நோய்க்கு எதிரான தடுப்பு மருந்து கால்நடை வைத்திய அலுவலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

இன்னும் போதிய அளவு மருந்து கைவசம் இருப்பதாக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ)

## நத்தார் நாள் சிறப்புப் போட்டி

யாழ்ப்பாணம், நவ 23

யாழ். கத்தோலிக்க இலக்கிய வட்டம் 96 — 97 ஆம் ஆண்டுக்குரிய கருப்பொருளான ''மனித மாண்பு'' என்ற தலைப்பின் கீழ் நத்தார் நாள் சிறப்புப் போட்டிகளை நடத்த உள்ளது. (இ-ரி)

## ஆட்டிறைச்சிக் கடை

சின்னக்கடையில் ஆட்டிறைச்சிக் கடை இன்று 23 - 11 - 96 முதல் திறக்கப்பட்டுள்ளதென்பதை அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அன்புடன் அறியத் தருகின்றேன்.

சி தங்கராசா
உரிமையாளர்

(43776)

---

# ஸ்ரார் கல்வி நிலையம்

சிவன் வீதி, சுன்னாகம்.

| | |
|---|---|
| பொருளியல் | — திரு மோகன் |
| கணக்கியல் | — திரு. கொலின்ஸ் |
| வர்த்தகம் | — திரு முரளி |
| வணிகபுள்ளிவிவரவியல் | — பிரபல ஆசிரியர் |
| அளவையியல் | — திரு. மனோ |

ஆரம்பம்: **23 - 11 - 1996**
சனிக்கிழமை பி. ப. 3-00 மணி

மேலதிக விவரங்களுக்கு அலுவலகத்தில்.

நிர்வாகி

(43761)

---

# யாழ். றோட்டறிக் கழக

ஆதரவில்

வடமராட்சி
றோட்டறக்ட் கழகம்
நடத்தும்

## விருந்தினர் சிறப்புரை தினம்

காலம்: **24-11-96** ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணி

இடம்: மேல்மாடிக் கட்டடம், தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை.

சிறப்புரைகள்:

1. பொருள்: ''இன்றைய தலைவர்கள்''
   வழங்குபவர்: திரு. N. நடராஜசுந்தரம் (தலைவர், முகாமைத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்.)
2. பொருள்: ''நற்பயனளிக்கும் பொதுஜனத் தொடர்புகள்''

வழங்குபவர்: லயன் A. பசுபதி (பதில் உதவி தொழில் ஆணையாளர், யாழ்ப்பாணம்.)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர்
வடமராட்சி றோட்டறக்ட் கழகம்

(சி-3544)

---

# 31 ஆவது நினைவு நாள்



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 1933 | 1996 |
| — | — |
| 03 | 10 |
| — | — |
| 18 | 24 |

## அமரர் இ. ஆனந்தராஜா

(ஓய்வு பெற்ற கட்டடப்படம் வரைபவர்)

சோதி தோன்றும் ஒரு தேசமுண்டு
விசுவாசக் கண்ணாற் காண்கின்றோம்
நம் பிதா அழைக்கும் போது நாம்
அங்கே வசிக்கச் செல்வோம்
துயரத்தால் ஓர் மாதம் நிறைந்ததப்பா
நினையாத நேரம் நிலை குலைந்ததப்பா
இறை தொண்டு செயல் பல புரிந்தாயப்பா
இறையன்பில் எமை நீ காத்தாயப்பா
உமது அழகு வதனத்தை இனி எப்போ
காண்போமப்பா.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் இன்று 23-11 96 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியில் பங்கு கொண்டு இறைவனிடம் இரந்து மன்றாட அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஆ. நா. தனபாலசிங்கம்,
(இலங்கை வங்கி [illegible])
6/1, மார்டீன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (43758)

---

# இடம் பெயர்ந்தோர் நிவாரணம்

குடாநாட்டில் இடம் பெயர்ந்தோருக்கான உலர் உணவு நிவாரணம் அடுத்த வாரம் முதல் வழங்கப்படவிருக்கிறது.

38ஏ, 38 9 இலக்க முத்திரைகளுக்கான விநியோகம் அடுத்தவாரம் முதல் ஆரம்பிக்கப்படும் என்றும் — இந்த விநியோகத்துக்குத் தேவையான பொருள்களை பெறுமாறு ப. நோ. கூ. சங்கங்கள் கேட்கப்பட்டுள்ளன என்றும் செயலக புனர்வாழ்வுப் பிரிவு தெரிவித்தது- (இ-3-ரி)

---

# பெயர் மாற்றம்

புலோலி வடக்கு கணையந்தோட்டத்தில் வசிக்கும்
அமரசிங்கம் கந்தசுவாமி
ஆகிய நான் 20-11-96 முதல் எனது பெயரை
**அமரசிங்கம் கண்ணன்**
என மாற்றியுள்ளேன் என்பதையும் இனிமேல் எனது பெயரை அமரசிங்கம் கண்ணன் என வழங்குவேன் என்பதையும் இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

அமரசிங்கம் கண்ணன்

கணையந்தோட்டம்,
புலோலி வடக்கு,
பருத்தித்துறை. (சி-3549)

---

# JAFFNA COLLEGE

presents

## 'WE LIFE THIS FLAME TO YOU'

Programme Christmas Carol by the Jaffna College Tamil and English Choir on Sunday the 24th at 3-30 p.m. (S.L.T) at Cathedral Church, Vaddukoddai.

Parents, Alumni, Friends and well wishers are cordially invited.

Principal,
Jaffna College

(C/3545)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



## அமரர் இராசையா கந்தவனம்

(இளைப்பாறிய ஆசிரியர்-
உடுப்பிட்டி, அமெரிக்கமிஷன் கல்லூரி)

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 26—11—1920 | 24—10—1996 |

### திதிநிர்ணய வெண்பா

தாதுவரு டத்தூக்கு சந்திரன்றேய் பிற்பக்கத்
தோதுதிதி யான்திர யோதசியிற் – றீதுவிட்ட
கந்தவன வாசிரியன் காய முகுத்தடைந்தான்
கந்தவன நாதன் கழல்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 23-11-96 சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

அன்புடன்
மகன் - தருமசோதி
மகள் - பத்மலோசனி
மருமகன் - கி. பாலச்சந்திரன்
(கிராம அலுவலர், கெருடாவில் கிழக்கு)
பேரப்பிள்ளைகள்: பிருந்தா, பிரியா

சிவனடியான் வளவு,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி. (43765)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## தடங்கல் ஏன்?

கிளிநொச்சியில் சேதமடைந்த பாடசாலைகளைத் திருத்துவதற்குத் தேவையான அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகளை எடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்திருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகளில் ஒன்றான ''யுனிசெவ்'' தொண்டர் நிறுவனம், கிளிநொச்சி மாவட்டத்தில் போர் காரணமாகச் சேதமடைந்த பாடசாலைகளைத் திருத்தவும், முற்றாகச் சேதமடைந்த பாடசாலைகளில் கொட்டகைகளை அமைக்கவும் உதவிட முன்வந்துள்ளது.

அதன் பொருட்டு, கூரைத் தகடுகளைக் கிளிநொச்சிக்கு எடுத்துச் செல்ல பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளிடம் அனுமதி கேட்ட போது, அதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டதாக, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி எம்.பிக்கள் இருவர் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரிடம் முறைப்பாடு செய்திருக்கிறார்கள்.

போரில் பாடசாலைகள் சேதமடைவது ஒன்றும் புதியதல்ல. கிளிநொச்சியில் நூற்றுக் கணக்கில் பாடசாலைகளும் இல்லை. அகதிகளைத் தங்க வைக்கக்கூடிய வசதிகளுடன் சுமார் 25 பாடசாலைகள் மட்டுமே இருந்ததாக ''உண்மை வெற்றி'' இராணுவ நடவடிக்கைக்கு முந்திய தகவல்கள் தெரிவித்தன. ஏனையவை அநேகமாக வெறும் ஒற்றை மண்டபப் பாடசாலைகளே.

எனவே, கிளிநொச்சி மாவட்ட மாணவர்களின் கல்வி பாதிக்கப்படாமல் இருப்பதற்கு கிளிநொச்சியில் சேதமடைந்த பாடசாலைகள் திருத்தப்பட வேண்டியது அவசியம். மாரி காலம் வந்துவிட்டது. இன்னும் இரண்டு வாரங்களில் க.பொ.த.ப. (சா) பரீட்சை ஆரம்பமாகப் போகிறது.

இத்தகைய பின்னணியில், பாடசாலைகளைத் திருத்துவது, ஆகக் குறைந்தது கூரைகளைப் போட்டு மாணவர்கள் மழையில் நனையாது பாதுகாப்பது என்பது மிகமிக அவசரமான தேவையாகும். உடனடியாகச் செய்யப்பட வேண்டிய பணியாகும்.

கிளிநொச்சி நகரம் அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது. ஆனால் அங்கு மக்கள் இல்லை. ஏனைய குடியேற்றப் பகுதிகளிலேயே மக்கள் வாழ்கிறார்கள். பலர் இடம் பெயர்ந்து அப் பகுதிகளுக்கே அகதிகளாகச் சென்றுள்ளார்கள்.

தனது கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் உள்ள பாடசாலைகளை ஏன் திருத்த வேண்டும்; அங்குள்ள மாணவர்களின் கல்வியில் ஏன் அக்கறை காட்ட வேண்டும் என்று அரசு எண்ணுகிறதா?

அவ்வாறில்லை என்றால், அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடு கொண்டுசெல்லத் தடை ஏன்?

போரினால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படக்கூடாது என்ற பெருநோக்குடனேயே, ''யுனிசெவ்'' இந்த மனித நேய உதவியைச் செய்ய முன் வந்திருக்கிறது.

அப்படியிருக்க வைக்கோல் பட்டறை நாய் போல தானும் செய்யாது, உதவ முன்வந்திருக்கும் ''யுனிசெவ்''வுக்கும் தடைபோடும் செயல் மிகவும் சின்னத்தனமானதாகும்.

இத்தகைய அணுகுமுறை தமிழர் மனங்களை வெல்வது என்ற அரசின் விருப்பத்துக்கு முற்றிலும் மாறானது நேர் எதிரான விளைவையே தரவல்லது.

# பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் மிகப் பெரிய அற்புதம் அன்பு தான்

பிள்ளையார் கோயில் ஒன்றில் ஒரு சாயி பக்தையைக் கண்டதும் அவரது சிநேகிதி கேட்டாராம், ''என்ன சத்தியா, நீயுமா எங்களுடைய கோயிலுக்கு வருகிறாய்?'' என்று. சத்தியாவுக்கு ஆச்சரியம்; உடனடியாக ஒன்றுமே பதிலாகக் கூற முடியவில்லை. சத்தியா சொல்லியிருக்க வேண்டியது: ''நண்பி, ஒரு சாயி பக்தர் தான் பிள்ளையார் கோயிலுக்கோ, சிவன், முருகன், கிருஷ்ணர் கோயில்களுக்கோ வந்து முறைப்படி பக்தி பூர்வமாக வணங்கப் பழக்கப்பட்டிருக்கிறார். சாயி அடியார்கள்தான் போட்டி பொறாமையின்றி அமைதியாக அன்பின் அடிப்படையில் ''எல்லோரும் வாழ்க'' என்ற மந்திரத்தை கோயிலில் உச்சரிக்கக் கற்பிக்கப்பட்டிருக்கின்றார்கள்'' என்று.

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 71 ஆவது திரு அவதார தினத்தை உலகெங்கும் உள்ள அவரது அடியார்கள் இன்று கொண்டாடுகிறார்கள். ஆனால் நமது நாட்டில் இந்து சமயத்தினரில் சாயி தத்துவத்தையும் நடைமுறைகளையும் அறிந்திருப்பவர்கள் ஒரு சிலரே.

சத்திய சாயிபாபாவின் போதனைகள், சாதனைகள் பற்றிய அடிப்படை உண்மைகள் சில பின்வருமாறு:

### ஆன்மிகம்

1. சாயி பாபா ஒரு புதிய சமயத்தை உண்டாக்க வரவில்லை. ஒருவர் எந்தச் சமயத்தில் பிறந்தாரோ, அந்தச் சமயத்திலேயே வாழ்ந்து, அதன் அரிய கோட்பாடுகளைக் கடைப்பிடித்து நல்ல இந்துவாகவோ, கிறிஸ்தவனாகவோ, முஸ்லிமாகவோ, புத்தனாகவோ வாழவேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றார்.

2. பிறருடைய சமயத்தை மதிக்க வேண்டும் என்று கூறுகிறார். ஏனெனில், 'ஒரேஒரு சமயம் தான் உண்டு, அது அன்பு என்னும் சமயம். ஒரே ஒரு கடவுள் தான் உள்ளார், அவர் எங்கும் உள்ளார்.'

3. 'கடவுள் உன்னிலும் இருக்கின்றார். நீயும் கடவுள் தான். அதை நீ உணரவில்லை.'

இவற்றை நாம் உணரச் செய்வதே ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் ஆன்மிக போதனையின் அடிநாதமும் நோக்கமும் ஆகும்.

### கல்வி

1. பகவான் ஸ்ரீ சத்திய பாபா நல்ல ஒழுக்கத்திற்கு முதன்மை கொடுக்கின்றார். 'கல்வியின் நோக்கம் நல்ல பண்புகளை வளர்ப்பதே' என்கிறார். ஒரு பிள்ளை ஆறு வயதிலிருந்தே வாய்மை, நன்னடத்தை, அமைதி, அன்பு, அகிம்சை என்ற ஐந்து மனித விழுமியங்களின் அடிப்படையில் கற்பிக்கப்படவேண்டும் என்பது சாயிபாபாவின் ஆன்மிகக் கல்வித் திட்டமாகும்.

2. அந்தக் கல்வியைப் புகட்டும் முறைகள் ஐந்து. அவை அமைதியாக இருத்தல் (பெரிய பிள்ளைகளுக்கு தியானம்), பிரார்த்தனை, பஜனை, கதை கூறுதல், கூட்டு முயற்சி (விளையாட்டு)



என்பனவாகும். அவை நவீன கல்வி முறைகளுக்கு ஏற்றன. ஆனால் அவை ஆன்மிக அடிப்படையில் இருப்பது புதுமை. அக்கல்விமுறை பிள்ளையின் மனத்தை ஒருமுகப்படுத்தி, உணர்வுகளைப் புனிதமாக்கி, ஞாபகத்தையும் அறிவையும் வளர்ப்பன. ஆகவேதான் பாபாவின் ஆன்மிகக் கல்வியில் வாரம் ஒரு நாள் ஒரு மணி நேரம் பங்கு பற்றிய பிள்ளைகள் தமது பாடசாலைகளிலும் எல்லாப் பாடங்களிலும் திறமையாகச் செய்வதை தாய்லாந்து ஆய்வுகள் காட்டியுள்ளன.

### சேவை

அன்பின் அடிப்படையில் சிந்தனையும் சொல்லும் சத்தியம் (வாய்மை) எனப்படும். அதன் செயற்பாடுதான் தர்மம் (ஏற்ற நன்னடத்தை). தன்னலமற்ற சேவை தான் தர்மத்தின் வெளிப்பாடு. சேவையில் பக்தி, கர்மம், ஞானம் என்ற மூன்று யோகங்களும் உண்டு. சேவை ஓர் ஆன்மிக சாதனை என்பார் பாபா.

பகவான் சாயிபாபா ஒரு நாட்டிற்கோ, மொழிக்கோ, சமயத்திற்கோ சொந்தமானவர் அல்லர். பகவானுக்கு பக்தர்கள் உலகில் பல நாடுகளில் உண்டு. எனினும் பகவான்

### நந்தி

பிறந்த புட்டபர்த்தி தென்னிந்திய ஆந்திராவில் ஒரு கிராமம், அவர் ஒரு திராவிடர், பிறப்பினால் இந்து, பேசும் மொழிகளில் ஒன்று தமிழ் என்பதில் எமக்கு ஓர் இரகசிய மகிழ்ச்சி இருக்கத் தான் செய்கிறது.

சாயி பஜனைகளில் பாடப்படும் 9 பாடல்களில் ஏழு பாடல்கள் முறையே விநாயகர், குரு, சிவன், சக்தி, முருகன், இராமர், கிருஷ்ணர் ஆகிய கடவுளருக்கு ஸ்தோத்திரம். ஒன்று சாயிக்கு, ஒன்று சர்வதர்மம் (மதம்). பகவான் பாடுவதால் பிறமொழியினர், பிற சமயத்தினர் அன்புடன் இப்பாடல்களைப் பாடுகிறார்கள்.

பகவானின் போதனைகளின் அடிப்படை உபநிஷதங்கள், கீதை, வேதாந்தம், பைபிள் ஆகியன. அந்த அறிவுரைகள் பல மொழிகளில் வெளிவருகின்றன. சாயி அடியார்கள் இப்போது அவரது அற்புதங்களைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பதில்லை. 'எனது மிகப் பெரிய அற்புதம் எனது அன்புதான்' என்கிறார் சாயி பாபா. அந்த அன்பில் மூழ்கவே பக்தன் விரும்புகிறான். பகவானின் வாழ்வே எமக்கு மிக அருமையான முன் உதாரணம். அந்த வாழ்வு நமது வழிகாட்டி.

ஓர் அவதாரம் உலகில் மனித உருவில் உலாவும் காலத்தில் வாழும் நாம் பாக்கியசாலிகள். மனத்திலே தூய்மையும், ஒளியும், அன்பும் இருப்பின் அந்தப் பாக்கியத்தை அனுபவிக்க முடியும்.

● ● ● ● ● ●

### நாளை

கார்த்திகை 9
ஞாயிற்றுக்கிழமை
திதி: சதுர்த்தசி
முற்பகல் 10.00 வரை
நட்சத்திரம்: பரணி
முற்பகல் 10.59 வரை.
திருக்கார்த்திகை - பூரணை விரதம்
ராகுகாலம்: 4.42 - 6 12
சுபநேரம்: 9.12 - 4.42
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### பகவான் பாபா சொன்னவை

#### அன்புடன் தொடங்குக

இந்த நாளை அன்புடன் தொடங்கு
இந்த நாளை அன்பினால் நிரப்பு
இந்த நாளை அன்பினால் கழித்திடு
இந்த நாளை அன்புடன் நிறைவு செய்
இதுவே கடவுளை அடையும் வழி
ஏனெனில் அன்பே கடவுள்

#### சாதனை

மலைகள் விழுந்து சாயட்டும் கடல்பெருக்கெடுத்து பூமி மேல் வரட்டும். ஆனால் உங்கள் சாதனையை மட்டும் எக்காரணம் கொண்டும் விட்டு விடாதீர்கள். அதே நேரத்தில் ஒழுக்கமும், தர்மமும் உங்களுடன் வளர்ந்து கொள்ளா விட்டால் சாதனை வீணாகும்.

#### குரு

குரு என்பவர் அறியாமையையும் இருளையும் போக்குபவராவார். குரு என்பவர் வெறும் மந்திரங்களை உபதேசிப்பவரல்லர்; வெறும் வேதாந்த விளக்கம் கூறுபவரல்லர். இவ்வுலக வழக்கில் யாரையெல்லாம் குரு என்று அழைக்கின்றோமோ அவர்களில் எவரும் குருவல்லர் அவர்கள் ஆசிரியர்களேயாவர். அவர்கள் ஆசாரியருமல்லர். வாழ்க்கையில் நடந்து காட்டி அவற்றைப் போதிப்பவரே ஆசாரியராவார். அவர்கள் குருவுமல்லர்; ஆசாரியருமல்லர். மந்திரத்தைக் காதில் ஓதிப் பணம் பெறுகிறார்கள். அவ்வளவே. குரு யார்? கடவுளே தான் குரு. வேறு யாரும் குருவல்லர்.

# குடாநாட்டில் படை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்ப்பாணக் குடாநாட்டில் படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு தயக்கமின்றி ஒத்துழைப்பு நல்குமாறு—

51 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா, பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் செய்தி அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டார்.

அந்தச் செய்தி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்ப்பாணக் குடாநாட்டை பாதுகாப்புப் படையினர் வென்றெடுத்து ஒரு வருடமாகி விட்டது. குடாநாட்டு மக்கள், நாட்டின் ஏனைய பகுதிகளைச் [illegible] மக்களைப்போன்று இயல்பான வாழ்க்கையை நடத்துவதற்கு வழிசெய்யுமுகமாக, அவர்களின் சுமைகளைக் குறைக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தினதும் பாதுகாப்புப் படையினரதும் அபிலாசையாகும். இதன் பொருட்டு இன்னும் பெருமளவில் செய்யப்பட வேண்டி உள்ளது என்பதில் சந்தேகமில்லை.

மக்களின் இரத்தத்தை உறிஞ்சும் வௌவால் போல் செயற்படாது விடுதலைப் புலிகளால் இயங்க முடியாது. பாதுகாப்புப் படையினர் இதனை உணர்ந்தே உள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த மாதத்தில் யாழ்ப்பாண நகரப் பகுதியில் நடத்திய கண்மூடித்தனமான கைக்குண்டுத் தாக்குதல்களால் மொத்தம் 39 பொதுமக்கள் காயமடைந்தனர்; ஒருவர் [illegible]. யாழ்ப்பாண நகரப் பகுதியில் கடந்த வாரத்தில் மட்டும் பாதுகாப்புப் படையினர் சுமார் 900 கைக்குண்டுகளைக் கண்டுபிடித்தனர். விடுதலைப் புலிகள் இந்தக் கைக்குண்டுகளைக் கொண்டு தமது மாவீரர் வாரத்தைக் கொண்டாடத் திட்டமிட்டிருப்பர் என்பதில் ஐயமில்லை. அவ்வாறு நடந்திருப்பின் மிகப் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் காயமுற்றிருப்பர்.

இந்தப் பகுதி மக்களின் ஒத்துழைப்பினாலேயே பெருந்தொகைக் கைக் குண்டுகளை மீட்க முடிந்தது. எனினும் பாதுகாப்புப் படையினரின் நோக்கத்தில் சந்தேகம் கொண்டுள்ள பொதுமக்களில் சிலர்; படையினருக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்குப் பின்னிற்கிறார்கள். எங்களது செயற்பாடுகள் தாமாகவே பேசும் விதத்தில் நாம் பணியாற்றுகிறோம். இவர்களுக்கு நாம் சொல்ல விரும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# நினைவாலயம் அமைக்க முடிவு

கொழும்பு, நவ. 23

தென்பகுதியில் 71, 88 ஆம் ஆண்டுகளில் இடம் பெற்ற கிளர்ச்சிகளின் போது காணாமற் போனவர்களின் ஞாபகார்த்தமாக நினைவாலயமும், பூங்காவும் அமைக்கப்படவிருக்கின்றன.

நிரபராதிகளின் நினைவாலயம் என்ற பெயரில் இந்த நினைவாலயம் ஜெயவர்த்தன புரவில் தியவன்ன ஓயாவுக்கு முன்பாக அமையவிருக்கிறது.

அத்துடன் அங்கு அமையவிருக்கும் பூங்காவில் மியூசியம் ஒன்றும் அமைக்கப்படும்.

படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் றிச்சர்ட் சொய்ஸா, எம்பிலிப்பிட்டியவில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் பொருள்கள் இந்த மியூஸியத்தில் வைக்கப்படும்.

(இ-3-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடாநாட்டில்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புவது என்னவெனில், உங்கள் மனதை மாற்றி எங்களுடன் ஒத்துழையுங்கள் என்பதாகும். எதிர்காலம் உங்களுக்காகவும், உங்கள் குடும்பங்களுக்குமே உரியது.

வலிகாமம் மேற்கிலும்இதே நிலை தான். வலிகாமத்தைக் கைப்பற்றிய பின்னர் உடனடியாக, இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் வலிகாமம் மேற்கில் படையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டதில் அங்கிருந்து 150 விடுதலைப் புலிகள் இல்லாமற் செய்யப்பட்டனர். அதன்பின்னர் அப்பகுதி மக்கள் இயல்பு வாழ்க்கையை நடத்த வகை செய்ய வேண்டும் என்பதே படையினரின் நோக்கமாகஇருந்தது. அதனாலேயே நாம் அங்கு இராணுவ முகாம்களைக் கூட நிறுவவில்லை.

ஆனால் பொதுமக்களாகிய நீங்கள் இயல்பு வாழ்க்கையை நடத்துவதைக்காண விடுதலைப் புலிகள் விரும்பவில்லை. பல வருடங்களுக்குப் பின்னர் ஓரளவு இயங்க ஆரம்பித்துள்ள சிவில் நிர்வாகத்தில் கை வைக்கத் தொடங்கினர்.

தங்கள் சகாக்களின் மரணத்தைக் கொண்டாடு முகமாக விடுதலைப் புலிகள் வர்த்தகர்களுக்கு வரி விதிக்கத் தொடங்கினர் அந்த வரிச் சுமையைச் சமாளிக்க வர்த்தகர்கள் பொருள்களின் விலைகளை உயர்த்தினர். இதனால் ஏழைப் பொதுமக்களுக்குக் கஷ்டங்களை உண்டாக்கினர்,

யாழ்ப்பாண நகருக்குள் செல்வதற்குள்ள தடை முகாம்களில் உள்ள படையினரை பொதுமக்களைக் கேடயமாக வைத்து விடுதலைப் புலிகள் தாக்குகின்றனர். அதனால் இதுவரை பல பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். அதன் காரணமாக, விடுதலைப் புலிகளின் இந்த நடவடிக்கையினால் பொதுமக்கள் தமது வழமையான வேலைகளைச் செய்வதற்கு யாழ்ப்பாண நகருக்குள் பல நாள்களில் போக முடியாதிருக்கிறது.

தமது தலைவரின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக பொதுமக்களின் உயிர்களைத் தியாகம் செய்வதற்கு விடுதலைப் புலிகள் முயற்சிக்கிறார்கள்.

தமது திட்டம் குறித்து அவர்கள், ஆனைக்கோட்டை, மானிப்பாய், உடுவில் மற்றும் பகுதிகளில் மக்களுக்கு அறிவித்திருக்கிறார்கள்.

வீணான உயிரிழப்புகளைத் தடுக்கும் நோக்குடன் பாதுகாப்புப் படையினராகிய நாம் வலிகாமம் பகுதியில் நடவடிக்கைகளை மேற்கொண்டோம். அப்பகுதி மக்கள் இதனைப் பெரிதும் வரவேற்றார்கள் என்பதனை நாம் சொல்லியே ஆகவேண்டும். இப்பகுதிகளில் இருந்து ஒரு டசினுக்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகளை பாதுகாப்புப் படையினரால் இல்லாமற் செய்ய முடிந்தது. அத்தோடு 25 தானியங்கி ஆயுதங்கள், தற்கொலை உடையணிகள், வெடி மருந்துகள், மிக முக்கியமான பெருமளவு மருந்து வகைகள் என்பனவற்றைப் படையினர் மீட்டனர்.

இந்த ஆயுதங்கள் பாதுகாப்புப் படையினரைக் கொன்றும் காயமுறுத்தியும் இருக்கும் என்பது ஒரு புறமிருக்க, பெரும் எண்ணிக்கையான பொதுமக்களும் கொல்லப்படவும் காயமுறவும் நேர்ந்திருக்கும்.

மக்களின் தேவைக்கென மானிப்பாய் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்த மருந்து வகைகளை விடுதலைப் புலிகள் மறைத்து வைத்திருந்தது தான் இதில் மன்னிக்க முடியாத குற்றமாகும்.

இதனால் அப்பகுதி மக்கள் தமது சிறு மருந்துத் தேவைக்கும் யாழ்ப்பாணம் செல்ல வேண்டியநிலை ஏற்பட்டது.

அப்பகுதி மக்களின் ஒத்துழைப்பினாலேயே பாதுகாப்புப் படையினர் மேற் கூறிய நடவடிக்கைகளை எடுக்க முடிந்தது. இங்கும் பாதுகாப்புப் படையினருக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு சிலர் பின்னின்றனர்.

மாணவர்களின் கல்வியையும் எதிர்காலத்தையும் பாழடிப்பதற்காக அவர்களைத் தமது கைப்பொம்மைகளாகப் பயன்படுத்த விடுதலைப் புலிகள் முயற்சிக்கின்றனர். இதனால் எமது பணி கஷ்டமுடையதாகிறது.

எதிர்வரும் நாள்களில் இப்பகுதியில் இரத்தம் உறிஞ்சும் தொல்லை இல்லாமல் அதனைத் துப்பரவு செய்வதற்கு பாதுகாப்புப் படையினருக்குத் தயக்கமின்றி ஒத்துழைப்பு வழங்குமாறு சகல மக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம் — என்று கோரப்பட்டுள்ளது. (சு)

## ஜானக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்டளைத் தளபதியாக அவர் தற்போது பணிபுரிந்து வருகின்றார்.

இந்திய தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் பயிற்சி நெறி ஒன்றைப் பின்பற்றுவதற்காக மேஜர் ஜெனரல் நீல் டயஸ் விரைவில் இந்தியாசெல்லவிருக்கின்றார். (உ)

## படையினர்—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றும் —

இந்த மோதல்களில் 30 புலிகள் வரை மரணமடைந்துள்ளனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் செய்தி வெளியிட்டது. (இ-3)


நல்லூர் ப. நோ. கூ சங்கம்

# உழவு இயந்திர சாரதி

## பதவிக்கான விண்ணப்பம் கோரல்

மேற்படி பதவிக்கு சாரதி அனுமதிப்பத்திரமுடைய 50 வயதிற்குட்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 06-12-1996 க்கு முன் கோரப்படுகின்றன. லொறியும் இருசில்லு உழவு இயந்திரமும் செலுத்தக்கூடிய சங்க எல்லைப்பரப்பில் வசிப்போருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். சம்பளம் கூ. ஊ. ஆணைக்குழுச் சட்டங்களுக்கு அமைவாக வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்.
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி.

(சி/3602)


மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

# அரசாங்க நியமனங்களில் விகிதாசாரம் புறக்கணிப்பு

### கூட்டணி எம்.பி. நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 23

அரசாங்க நியமனத்தில் இன விகிதாசாரம் புறக்கணிக்கப்பட்டுள்ளது. தமிழர், முஸ்லிம்கள் அரச சேவையில் நியமிக்கப்படுவது படிப்படியாக வீழ்ச்சி கண்டுள்ளது''

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி. ஜோசப் பரராஜசிங்கம் நாடாளுமன்றத்தில் கவலை தெரிவித்தார்.

இன விகிதாசார திட்டமிடல் தேசிய ஒருமைப்பாட்டு அமைப்பு நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அமைச்சுச் செயலாளர்களாக தமிழர் ஒருவரும், முஸ்லிம் ஒருவருமே உள்ளனர்.

1985 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரச சேவையில் 9 9 வீதமாக இருந்த தமிழர்கள் 5.9 சதவீதமாக 1990 இல் குறைந்தனர்.

இந்தியத் தமிழர்களின் எண்ணிக்கையோ 0.5 சதவீதமாக இருந்தது. 1990 இல் 0.59 சதவீதமாகியது.

முஸ்லிம்களின் எண்ணிக்கையும் 1985 இல் 3.4 சதவீதமாக இருந்தது 1990 இல் 2 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது.

இப்படி அவர் மேலும் கூறினார். [இ-3]

## பிரதேச செயலரை சந்திக்கும் தினம்

வடமராட்சி, நவ. 23

வடமராட்சி வடக்கு பிரதேச செயலரை பொதுமக்கள் பிரதி புதன், வெள்ளிக்கிழமைகளில், பருத்தித்துறையில் உள்ள பிரதேசசெயலகத்தில் சந்திக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-173)

## அன்னை திரேஸா மீண்டும் சுகவீனம்

கல்கத்தா, நவ. 23

அன்னை திரேஸாகல்கத்தா வுட்லண்ட்ஸ் மருத்துவமனையில் மீண்டும் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு அவருக்கு இருதயக் கோளாறு ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (இ-4)

## டக்ளஸின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தது தெரிந்ததே.

ஆனால் டக்ளஸ் தேவானந்தாவோ ''மக்களுக்கு சேவை செய்யும் கொள்கையை விட்டுக் கொடுத்து பதவி பெறும் நோக்கம் எனக்கு இல்லை. வடக்கு — கிழக்குப் பகுதிகளை அபிவிருத்தி செய்து அங்குள்ள மக்களின் நலன்களைப் பேணக் கூடிய அதிகாரத்தைப் பெறவே விரும்புகிறேன்'' — என்று அரசுக்குத் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார் என்று கூறப்படுகின்றது.

வடக்கு—கிழக்கு நிர்வாகத்துக்குப் பொறுப்பான அமைச்சை உருவாக்கித் தந்தால் அதனை ஏற்கத் தாம் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினாராம்.

ஆனால் வடக்கு — கிழக்கு விவகாரம் சம்பந்தமான தனி அமைச்சு ஒன்றை உருவாக்குவதில் சட்டப் பிரச்சினை இருப்பதாகவும்—

அப்படிச் செய்வதற்கு அரசமைப்பு இடமளிக்காது எனவும் —

அரசுத் தரப்பில் கூறப்படுகின்றதாம்.

தற்போது வடக்கு — கிழக்கில் மாகாணசபை இல்லாத போதும் ஆளுநர் ஒருவர் செயல்படுகின்றார். இந்நிலையில் அவருக்கு ஆலோசனை வழங்கக் கூடியவர்களை நியமிக்கலாமே ஒழிய அவரையும் மீறி அதிகாரம் செலுத்தக் கூடிய ஒருவரை நியமிப்பது சட்டச் சிக்கலையே உருவாக்கும். அவசர காலச் சட்டத்தைப் பயன் படுத்திக் கூட ஆளுநரை மீறிச் செயல்படக் கூடிய நிலையை உருவாக்க முடியாது என்று சட்ட ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதனால்தான் இடைக்கால நிர்வாகத்தையும் ஏற்படுத்த முடியாமல் இருக்கின்றது — இவ்வாறு அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாம். (உ)



## 7 விக்கெட்டுகள் இழப்புக்கு இந்தியா 172 ஓட்டங்கள்

அஹமதாபாத், நவ.23

இந்தியா, தென் ஆபிரிக்கா அணிகளுக்கிடையேயான முதலாவது ரெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டமுடிவின்போது இந்தியா 7 விக்கெட்டுகளை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது. புதிய ஆட்டக்காரரான லக்ஷ்மன் 50 ஓட்டங்களுடனும் அனில் கும்ளே 22 ஓட்டங்களுடனும் ஆடிக் கொண்டிருந்தனர்.

8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 202 ஓட்டங்களுடன் நேற்று ஆட்டத்தை ஆரம்பித்த தென் ஆபிரிக்கா 244 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. அந்த அணியின் வேகப் பந்து வீச்சாளரான டிவிலியர்ஸ் 67 ஓட்டங்களை எடுத்தார்.

## தமக்கு பாதுகாப்பு இல்லை என்கிறார் கோப்பாய் யுவதி

கொழும்பு, நவ. 23

''எனக்கு இங்கு பாதுகாப்பு இல்லாத நிலையில் எனது நலனில் அக்கறை கொண்டுள்ள டென்மார்க் அரசு எனது நிலைமையை மீள் பரிசீலனை செய்து எனக்குப் புகலிடம் அளிக்க வேண்டும். இதுவே எனது வேண்டுகோள்''

டென்மார்க்கில் இருந்து நாடு கடத்தப்பட்டு இலங்கைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் விடுதலையான கோப்பாய் வாசியான சித்ரா ராஜேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எனது அக்காவுடன் யாழ்ப்பாணம் போகவும் பயமாக இருக்கிறது. கொழும்பில் தங்கவும் பயமாகவிருக்கிறது என்றும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் கல்கிஸை நீதிமன்றத்தில் இவர் விடுதலை செய்யப்பட்டு, யாழ்ப்பாணத்தில் இருந்து பொலீஸாரால் விமானத்தில் அழைத்துச் செல்லப்பட்ட அவரது சகோதரி வசந்தி அருந்தவராசாவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

அவர் டென்மார்க்கில் இருந்து நாடு கடத்தப்பட்ட பின்னர் அவரின் நிலை குறித்து ஆராய இலங்கை வந்த நான்கு டென்மார்க் பத்திரிகையாளர்களை இலங்கை அரசு நாடு கடத்தியது தெரிந்ததே.

## அரசுக்குத்—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதே போன்று நவசமசமாஜக் கட்சியைச் சேர்ந்த வாசுதேவ நாணயக்காரவும் தினமும் ஒவ்வொரு அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் பங்கு பற்றி அரசுக்குத் தொல்லை கொடுத்து வருகிறார்.

அமைச்சர் தொண்டமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், அஷ்ரப்பின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவையும் அரசுக்குத் தொடர்ந்து தலையிடி கொடுத்து வருகின்றன.

இவ்வளவு நெருக்கடிகளையும் சமாளித்துவரும் அரசுக்கு தற்போது இருப்பது ஒரே ஒரு பெரும்பான்மை வாக்குத் தான்.

இத்தகைய நிலையில் அரசுக்குள் உள்ள கட்சிகள் கொடுத்துவரும் 'தொல்லை ஜனாதிபதியின் பொறுமையைச் சோதித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது (இ-10)

## பொருள்கள் இறக்கும் வேலை பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 23

கடல் கொந்தளிப்பு, கடும் காற்றுக் காரணமாக பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கிக் கொண்டிருந்த பாஜ் ஒன்றும் படகு ஒன்றும் சேதமடைந்தன.

இதனை அடுத்து கப்பல் காங்கேசன்துறைக்குத் திரும்பியது. (இ-3)

## பேராதனை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்பது மாணவர்கள் தமது சப்பாத்துக் கால்களால் அவரை உழக்கியதாகவும்—தெரிவிக்கப்பட்டது'

தலையில் கண்டல் காயத்துடனும், உடம்பு நோவுடனும் இந்த மாணவன் கொழும்பில் தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதே கற்கை நெறியில் பயிலும் வேறு சில தமிழ் மாணவர்களும் தாக்கப்பட்டு காயத்துடன் கொழும்பில் சிகிச்சை பெறுவதாகவும் அந்த மாணவன் தெரிவித்தார். (இ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற் லிமிடெட்டினரால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23-11-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org